செய்தி வெளியீடு எண் : 1918 நாள் : 02.11.2022

# செய்தி வெளியீடு

## மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.வி செந்தில்பாலாஜி அவர்கள் தலைமையில் தமிழகத்தில் பெய்து வரும் வடகிழக்கு பருவமழை குறித்தும் மேற்கொள்ளப்பட வேண்டிய தொடர் நடவடிக்கைகள் குறித்தும் சிறப்பு ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு மின்சார வாரிய தலைமை அலுவலகத்தில் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் திரு. வி செந்தில்பாலாஜி அவர்கள் தமிழகத்தில் பெய்து வரும் வடகிழக்கு பருவமழையினை எதிர்கொள்வதற்காக இதுவரை எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் சிறப்பு ஆய்வுக் கூட்டம் நடத்தினார். இக்கூட்டத்தில் அனைத்து மண்டல தலைமைப் பொறியாளர்கள், அனைத்து மின் பகிர்மான வட்ட மேற்பார்வை பொறியாளர்கள் காணொளி காட்சி மூலம் கலந்து கொண்டனர், இந்த ஆய்வுக் கூட்டத்தின் போது தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., இயக்குநர்/பகிர்மானம் திரு.மா.சிவலிங்கராஜன், தலைமை அலுவலக தலைமைப் பொறியாளர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.

இந்த ஆய்வுக் கூட்டத்தின் போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் இதுவரை வடகிழக்கு பருவமழையினை எதிர்கொள்வதற்காக எடுக்கப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து விரிவான ஆய்வினை காணொளி காட்சியின் வாயிலாக மேற்கொண்டார்.

ஆய்வின் போது, இது போன்ற மழைக் காலங்களில் உயர் அலுவலர்கள் அனைவரும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தினருடனும், தீயணைப்பு துறையினருடனும் எப்பொழுதும் தொடர்பில் இருக்க வேண்டும் எனவும் அனைத்து அலுவலர்களும் தமது அலைபேசியை எந்தக் காரணம் கொண்டும் OFF செய்து வைக்கக்கூடாது எனவும், நுகர்வோரிடமிருந்து புகார்கள் வரும் பட்சத்தில் அதை உரிய முறையில் பரிசீலிக்க வேண்டும் என்றும், இதனை மீறுபவர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அனைவருக்கும் உத்தரவிட்டார்.

மழைக்காலங்களில், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவரும் மிகுந்த கவனத்துடனும், பொதுமக்களிடமிருந்து புகார்கள் எதுவும் வரப்பெற்றால் அதனை உதாசீனப்படுத்தாது அர்ப்பணிப்பு உணர்வுடன் செயல்பட வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அனைவரையும் கேட்டுக் கொண்டார்.

**பின்னர், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் பேசுகையில்,**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் ஆய்வு கூட்டங்கள் நடத்தப்பட்டு, ஒவ்வொரு துறைகளுக்கும் எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவுகள் வழங்கினார்கள். குறிப்பாக, மின்சார வாரியத்தை பொறுத்தவரை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக எடுக்கப்பட்ட நடவடிக்கையின் மூலமாக இந்த வடகிழக்கு பருவமழையினை எதிர்கொள்வதற்காக 18,380 மின்மாற்றிகள், 2,00,000 மின் கம்பங்கள் மற்றும் 5,000 கி.மீ. மின்கடத்திகள் கையிருப்பில் உள்ளன. கடந்த 15.06.2022 முதல் 14,69,872 சிறப்பு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

அவற்றுள் 40,000 மின்கம்பங்கள் புதிதாக மாற்றப்பட்டிருக்கின்றன, சாய்ந்த நிலையில் இருந்த 32,685 மின் கம்பங்கள் சரிசெய்யப்பட்டிருக்கின்றன, புதியதாக 25,996 மின் கம்பங்கள் இடைச்செருகல் செய்யப்பட்டிருக்கின்றன, 1,17,789 இடங்களில் பலவீனமான இன்சுலேட்டர்கள் மாற்றப்பட்டிருக்கின்றன, இதுதவிர்த்து சுமார் 1,800 கி.மீ. பழைய மின்கம்பிகள் புதியதாக மாற்றப்பட்டிருக்கின்றன எனவும் தெரிவித்தார்.

சென்னை மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் இதுவரை 2,788 எண்ணம் பழுதடைந்த மின்பெட்டிகள் சரிசெய்யப்பட்டிருக்கின்றன. 3,424 மின்பெட்டிகளில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இதுதவிர்த்து, இன்று வரை 3,066 பில்லர் பெட்டிகள் தரைமட்டத்திலிருந்து ஒரு மீட்டர் அளவிற்கு மழைநீர் புகா வண்ணம் உயரப்படுத்தப்பட்டிருக்கின்றன. இதேபோல், துணை மின் நிலையங்களில் இருக்கும் 16 உயரழுத்த மின்மாற்றிகளின் அடித்தளம் ஒரு மீட்டர் உயரத்திற்கு உயர்த்தப்பட்டிருக்கிறது என மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

நுகர்வோர் மின் சேவை மையமான மின்னகத்தில் இதுவரை மொத்தம் 12,36,725 புகார்கள் பெறப்பட்டு அவற்றுள் 12,27,281 புகார்களுக்கு (99%) தீர்வுகள் காணப்பட்டுள்ளன. மீதம் இருக்கக்கூடிய புகார்கள் சரிசெய்யப்பட்டு வருகின்றன. தமிழகம் முழுவதுமாக ஒட்டுமொத்தமாக 44 மின் பகிர்மான வட்டங்களிலும் 760 குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு குழுவிலும் 15 முதல் 20 பணியாளர்கள் அமர்த்தப்பட்டு 760 குழுக்கள் இந்த மழையை எதிர்கொண்டு சீரான மின் விநியோகம் செய்வதற்காக தயார் நிலையில் இருக்கின்றன. 12 மண்டலங்களுக்கும் 24x7 மணி நேரமும் செயல்படும் விதத்தில் சிறப்பு அலுவல் அதிகாரிகளாக மொத்தம் 56

செயற்பொறியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் தலைமையின் கீழ் பாதுகாப்பு குழுக்கள் அமைக்கப்பட்டு வடகிழக்கு பருவமழையினால் ஏற்படும் மின் தடங்கல்கள் மற்றும் சேதாரங்கள் குறித்து உடனடியாக அறிக்கை அளிப்பதற்கும் மற்றும் தேவைப்படும் தளவாட சாமான்களை உடனடியாக தெரிவிப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அவர்களுடைய தொலைபேசி எண்கள் அந்தந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கும் தெரியப்படுத்தப்பட்டிருக்கின்றன.

சென்னையைப் பொருத்தவரை, மாநகராட்சியினரால் அமைக்கப்படும் 24x7 மணி நேரமும் செயல்படக்கூடிய கண்காணிப்பு குழுவிற்கு வாரியத் தரப்பிலிருந்து 2 பொறியாளர்கள் முறைப்பணியில் துறைசார்ந்த புகார்களை கவனிப்பதற்காக அனுப்பப்படுவர் எனவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் நேற்றைய மின்தேவை 13,746 மெகாவாட் ஆகவும், இன்றைய மின்தேவை 13,350 மெகாவாட் ஆக உள்ளது.

சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள புறநகர் பகுதிகளுக்கு மின் விநியோகம் செய்யும் 233 துணை மின் நிலையங்களில் ஒன்று கூட மழையின் காரணமாக இதுவரையிலும் OFF செய்து வைக்கப்படவில்லை. அதேபோல், இப்பகுதிகளுக்கு மின்சாரத்தை எடுத்துச் செல்லும் 1,834 பீடர்களும் இயக்கத்தில் இருக்கின்றன எனவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

தமிழ்நாடு முழுவதும் சென்னை தவிர்த்து, ஒவ்வொரு மின்பகிர்மான வட்டத்திலும் அவசர நிமித்தம் பணி செய்வதற்கு பகல் நேரத்தில் 6,560 பணியாளர்களும், இரவு நேரத்தில் பணி செய்வதற்கு 2,400 பணியாளர்களும், சென்னை மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் பகல் நேரத்தில் பணி புரிவதற்கு 1,440 பணியாளர்களும் இரவு நேரத்தில்

பணி புரிவதற்கு 600 பணியாளர்களும் ஆக மொத்தம் 11,000 பணியாளர்கள் களத்தில் உள்ளனர்.

வடகிழக்கு பருவமழையினை எதிர்கொள்வதற்கு கீழ்கண்ட உபகரணங்கள் தயார் நிலையில் உள்ளன எனவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

| | | |
|---|---|---|
| 1. மின் திறன் ரம்பம் | – | 617 Nos. |
| 2. மரம் வெட்டும் கருவி | – | 1,506 Nos. |
| 3. மணிலா கயிறு | – | 15,557 Nos. |
| 4. நீர் இறைக்கும் பம்பு | – | 90 Nos. |
| 5. டீசல் ஜெனரேட்டர் | – | 396 Nos. |
| 6. அவசரகால விளக்குகள் | – | 3,586 Nos. |
| 7. எரிவாயு வெட்டும் இயந்திரம் | – | 16 Nos. |
| 8. சங்கிலி கப்பி | – | 1,005 Nos. |
| 9. ஏணி | – | 1,274 Nos. |
| 10. ரப்பர் கையுறைகள் | – | 16,833 Nos. |
| 11. பாதுகாப்பு கயிறு | – | 23,597 Nos. |
| 12. பளுவான சம்மட்டி | – | 615 Nos. |
| 13. வெல்டிங் இயந்திரம் | – | 21 Nos. |
| 14. ஹாலஜன் விளக்கு | – | 186 Nos. |
| 15. வாக்கி டாக்கி | – | 110 Nos. |
| 16. லாரி/கிரேன் லாரி | – | 223 Nos. |

எனவே தமிழகத்தை பொறுத்தவரை மாண்புமிகு முதலமைச்சர் எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையின் காரணமாக நேற்று, நேற்று முன் தினம் எல்லாம் சென்னை உட்பட தமிழகம் முழுவதும் எந்தவிதமான மின் விநியோகத்தில் பாதிப்புகளும் இல்லாத அளவிற்கு சீரான மின் விநியோகம் வழங்கப்பட்டு வருகின்றன. அதற்கு காரணம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி எடுக்கப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கையின் மூலமாக எந்த விதமான பாதிப்பும் இல்லாத அளவிற்கு சீரான மின் விநியோகம் வழங்கப்பட்டு வருகின்றன.

மின் பகிர்மான வட்டங்களில் தளவாடப் பொருட்கள் பற்றாக்குறை என்பது இல்லை, தேவையான அளவு இருப்பு உள்ளது.

இந்த வடகிழக்கு பருவமழைக் காலத்தில் மழையைப் பொருட்படுத்தாமல் மிக சிறப்பாக பணியாற்றக்கூடிய பணியாளர்கள், அலுவலர்கள் அனைவருக்கும் எனது சார்பாகவும், துறையின் சார்பாகவும் மனமார்ந்த நன்றியினையும், பாராட்டினையும் அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன் என்று தெரிவித்தார்.

பின்னர், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலைமை அலுவலகத்தில் செயல்பட்டு வரும் 24 மணி நேர நுகர்வோர் மின் சேவை மையமான மின்னகத்தை ஆய்வு செய்தார்கள்.

**************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in